R.MEGANATHAN.GHSS,VEEDUR, VPM & SAI K.THIRUKUMARAN, Dr.AGHSS,EGMORE,CHENNAI-76
CELL: 9543255318 CELL: 9865957299

# முழுப் பாடத்திட்ட தேர்வு - 2020 – 2021
## ( குறைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி )

சமூகஅறிவியல் காலம் அளவு : 3 :00 மணி
வகுப்பு : 10 மதிப்பெண் ; 100

### பகுதி – I
( மதிப்பெண்கள் : 14 ) 14X1=14

குறிப்பு : (1) இப்பகுதியில் உள்ளஅனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(2) கொடுக்கப் பட்டுள்ள நான்கு மாற்றுவிடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலர் எந்தநாட்டைச் சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்கஐக்கியநாடுகள்
2. **கூற்று:** குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதைஉணர்ந்தார்.
**காரணம்:** அவர் 1941இல் கடன் குத்தகைத்திட்டத்தை தொடங்கினார்.
அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை.
ஈ)காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.
3. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
அ) 1805 மே24 ஆ) 1805 ஜூலை10 இ) 1806 ஜூலை10 ஈ) 1806 செப்டம்பர்10
4. அமிர்தசரஸில் ரௌலட்சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யபட்டவர்யார்?
அ) மோதிலால் நேரு ஆ) சைஃபுதீன் கிச்லு இ) முகம்மது அலி ஈ) ராஜ் குமார் சுக்லா
5. 1709 இல் தரங்கம் பாடியில் ---------- ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ் இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்
6. பழைய வண்டல்படிவுகளால் உருவான சமவெளி __________.
அ) பாபர் அ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்
7. ஒரே அளவு மழை பெறும் இடங்களை இணைக்கும் கோடு _________ ஆகும்.
அ) சமவெப்ப கோடுகள் ஆ) சம மழைக்கோடுகள்
இ) சம அழுத்தக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்
8. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்
அ) அட்சபரவல் ஆ) உயரம் இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் ஈ) மண்
9. தமிழ்நாட்டின்அட்சப்பரவல் --------- முதல் ---------- வரை உள்ளது.
அ) 8°4´ வ முதல் 13° 35´ வ வரை ஆ) 8° 5´ தெ முதல் 13° 35´ தெ வரை
இ) 8° 0´ வ முதல் 13° 05´ வ வரை ஈ) 8° 0´ தெமுதல் 13° 05´ தெ வரை
10. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு ------------
அ) ஒளிப்படவியல் ஆ) மக்களியல் இ) ஆடற்கலையியல் ஈ) மக்களடர்த்தி
11. (i) இந்தியாவில் சில மாநிலங்கள் மட்டும் சட்ட மேலவையை பெற்றுள்ளன.
(ii) மேலவையின் சில உறுப்பினர்கள் நியமிக்கப் படுகிறார்கள்.
(iii) மேலவையின் சில உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தடுக்கப்படுகிறார்கள்
(அ) ii & iv சரி (ஆ) iii & iv சரி (இ) i & iv சரி (ஈ) i, ii சரி
12. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?
அ) சட்ட ப் பிரிவு 50 ஆ) சட்டப் பிரிவு 51 இ) சட்டப் பிரிவு 52 ஈ) சட்டப் பிரிவு 53



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

R.MEGANATHAN.GHSS,VEEDUR, VPM & SAI K.THIRUKUMARAN, Dr.AGHSS,EGMORE,CHENNAI-76
CELL: 9543255318 CELL: 9865957299

13. இந்திய அரசாங்கம் 1991 இல் --------------- ஐ அறிமுகப்படுத்தியது.
அ) உலகமயமாக்கல் ஆ) உலக வர்த்தக அமைப்பு
இ) புதிய பொருளாதார கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை
14. ஒரு நாடு, ஒரேமாதிரியான வரி என்பதை எந்தவரி உறுதிப் படுத்துகிறது?
அ) மதிப்புக் கூட்டு வரி (VAT) ஆ) வருமான வரி
இ) பண்டங்கள்மற்றும் பணிகள்வரி ஈ) விற்பனைவரி

## பகுதி – II

**(மதிப்பெண்கள் : 20)** **10X2=20**

**எவையேனும் 10 வினாக்களுக்குமட்டும்விடையளிக்கவும்.**
**( 28 வதுவினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும் )**

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
16. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.
17. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
18. பெரியாரை ஒரு பெண்ணியக்கவாதியாக மதிப்பிடுக
19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக
20. "பருவமழை வெடிப்பு" என்றால் என்ன ?
21. தேரி என்றால் என்ன?
22. தமிழ் நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
23. அரசியலமைப்பு என்றால் என்ன?
24. நிதி மசோதா என்றால் என்ன?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக
26. நாட்டு வருமானம் - வரையறு
27. FAO வின்படி உணவு பாதுகாப்பைவரையறு.
28. கருப்புப் பணம் என்பதன் பொருள் என்ன?

## பகுதி - III

( மதிப்பெண்கள் : 50 ) 10X5= 50

எவையேனும் **10** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
**42** வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

29.**கோடிட்ட இடங்களை நிரப்புக:**
i). குலாம்கிரி நூலை எழுதியவர். ---------
ii). சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியமர்த்தப்பட்ட முதல் இந்திய நீதிபதி ---------- ஆவார்.
iii). கிழக்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் -------- ஆகும்.
iv). உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது ------
v). -----------'லிட்டில் ஜப்பான்' என்று பற்றுடன் அழைக்கப்படுகிறது.
30. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி
31. பெண்களின் மேம்பாட்டிற்கு 19-ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக
32.அ) **வேறுபடுத்துக :**
i . வானிலை மற்றும் காலநிலை
ii). உலோக கனிமங்கள் மற்றும் அலோக கனிமங்கள்

**ஆ) காரணம் கூறுக.**
வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு
33. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி
34. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

35. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
36. தமிழ்நாட்டின் பீடபூமி நிலதோற்றத்தின் தன்மையை விவரிக்கவும்.
37. அடிப்படை உரிமைகளுக்கும்,அரசுநெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினைவிவரி?
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும்வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்குபதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுதவேண்டும்.

41. **கீழ்காண்பனவற்றிற்கு காலக் கோடுவரைக:**
1930 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கியநிகழ்வுகளை காலக்கோட்டில்எழுதுக.

42. **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.**
i). கிரேட் பிரிட்டன்
ii). இத்தாலி
iii).துருக்கி
iv). ஹவாய்தீவு
v). ஹிரோஷிமா

**பகுதி - IV**

( மதிப்பெண்கள் : 16) **2X8 = 16**

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.**

43. கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
43. தன்னாட்சி (ஹோம்ரூல்) இயக்கத்தை தொடங்கியதன் மூலம் திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் இந்திய சுதந்திர போராட்டத்தை 1916ம் ஆண்டுக்குப் பின் எவ்வாறு தக்க வைத்தனர்?

குறிப்பு : பார்வையற்றமாணவர்கள்வரைபடத்தில்இடங்களைகுறிப்பிட்டுக்காட்டுவதற்கு பதிலாகஅவற்றைப்பற்றியகுறிப்புகள்மட்டும்எழுதவேண்டும்.

44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரு வனவற்றை குறிக்கவும்.**

i). ஜாஸ்கர்
ii). K2 ( காட்வின் ஆஸ்டின் )
iii). இலட்ச தீவுகள்
iv). காவிரி
v). தக்காணபீடபூமி
vi). நீலகிரி உயிர்க்கொளப் பெட்டகம்
vii). டெகரி அணை
viii). அதிகமாக மழைப் பெறும் பகுதிகள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

R.MEGANATHAN.GHSS,VEEDUR, VPM & SAI K.THIRUKUMARAN, Dr.AGHSS,EGMORE,CHENNAI-76
CELL: 9543255318 CELL: 9865957299

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வரு வனவற்றை குறிக்கவும்.**

*i) வைகை ஆறு*
*ii) அகஸ்தியமலை*
*iii) கரிசல்மண்*
*iv) மலைக் காடுகள்*
*v) எண்ணூர் துறைமுகம்*
*vi) மெரினா கடற்கரை*
*vii) கோயம்புத்தூர் விமான நிலையம்*
*viii) மேட்டூர்அணை*

**ALL THE BEST**

**BY**

***R.MEGANATHAN. MA,B.Ed***
***( B,T ASST. SOCIAL SCIENCE)***
***GHSS, VEEDUR 605652***
***VILLUPURAM***
***PH:9543255318***

***SAI K.THIRUKUMARAN.***
***M.A.,Mcom.,M.Ed.,HPEd***
***( B,T ASST. SOCIAL SCIENCE )***
***DR.AMBEDKAR GHSS***
***EGMORE CHENNAI -76***
***PH:9865957299***



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com